[4th September 1958

SRI A. GOVINDASAMY : சர்க்கார் பொறுக்குவிதைப் பண்ணைக்கு நிலங்களை குத்தகைக்கு எடுக்கிறபோது பக்கத்தில் இருக்கும் நிலங்களை தாரதம்மியப்படுத்தித்தான் குத்தகை நிர்ணயிக்கிறார்களா ? அல்லது கலெக்டரின் இஷ்டப்படி நிர்ணயிக்கப்படுகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கலெக்டரின் இஷ்டப்படி செய்வதல்ல. தரத்தையும் பார்த்துத்தான் செய்யவேண்டும். கலெக்டர் செய்வது தவறாக இருந்தால் அது கவனிக்கப்படும்.

SRI S. M. ANNAMALAI : இந்த விதைப் பண்ணைகளிலிருந்து தயாரிக்கும் விதைகள் (பர்ஸ்ட் க்ளாஸ்படி) ஒரு பவுண்டிற்கு 20 நயா பைசா என்பது மார்க்கட் ரேட்டைவிட சற்று அதிகமாக இருக்கிறது என்று புகார்கள் வந்துள்ளதா ? அப்படியானால் அதைக் குறைக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி புகார்கள் ஒன்றும் வரவில்லை. புகார்கள் வந்தால் அவைகள் கவனிக்கப்படும்.

SRI A. GOVINDASAMY : ராமநாதபுரம் மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் விதைப் பண்ணைகள் ஏற்படுத்த ஜல வசதியிருக்கிறதா ? அதற்கு வேண்டிய காரியங்களில் இப்பொழுது ஈடுபட்டிருக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதுபற்றிய விவரங்கள் இப்பொழுது என்னிடமில்லை. ஜலவசதியைப் பார்த்துத்தான் இது எடுத்துக் கொள்ளப்படும்.

SRI K. SATTANATHA KARAYALAR : குத்தகைக்கு எடுத்துக்கொள் ளப்படும் நிலங்கள் இன்ன விலையில் இருக்கவேண்டும் அல்லது இன்ன குத்தகைதான் கொடுக்கவேண்டுமென்று ஏதாவது க்ளுப்தப் படுத்தப் பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதில் சராசரி விலை குறிப்பிடப்பட்டிருக்கிறது. எல்லாவற்றையும் கணக்கிட்டுப் பார்த்து சராசரி விலைக்கு மேல் போகக்கூடாது என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

SRI M. P. SUBRAMANIAM : சர்க்கார் நடத்தும் விதைப் பண் ணைகள் பெரும்பாலும் நஷ்டத்தில் வேலை செய்கிறது என்று தெரியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எத்தனை பண்ணைகள் என்று நினைவில்லை, சில பண்ணைகள் நஷ்டத்தில் வேலை செய்து வருகிறது இதுவரையில். ஆனால் முதல் வருஷத்தை விட இரண்டாவது வருடத்தில் அதில் அபிவிருத்தி காணப்படுகிறது. விதைப் பண்ணைகள், சாதாரண பயிர் போடுவதுபோல் அல்ல. அதில் கொஞ்சம் செலவாகிறது. இருந் தாலும் இப்பொழுது இதை எஸ்டிமேட்ஸ் கமிட்டி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். இப்பொழுதே அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட் வந்த பிறகு மேலும் கவனம் செலுத்தப்படும்.

Socialistic Pattern of Society

* 28 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

பொருளாதாரத் துறையில் ஏற்றத்தாழ்வற்ற சமத்துவ சமு தாயத்தை நிறுவ சர்க்கார் முயற்சிக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir. That has been and is the endeavour of the Government.

SRI N. R. THIAGARAJAN : இந்த முயற்சிகளில் எவை எவை வெற்றி பெற்றிருக்கின்றன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதை கேள்வி நேரத்தில் சொல்லமுடியாது. பட்ஜெட் விவாதத்தின்போது கேட்டால் சொல்லுகிறேன்.

4th September 1958]

SRI K. VINAYAKAM: What are the essential features or salient features of a 'socialistic society' and a 'socialistic pattern of society' and what is the difference between the two? May I also know what we are striving for?

THE HON. SRI C. SUBRAMANIAM: I cannot give a thesis of all those things during the question-time.

SRI M. P. SARATHI: ஸர், இந்த ஏற்றத்தாழ்வு பொருளாதார துறையில் மாத்திரம் போக்குவதற்கு முயற்சி செய்யப்படுவதாக கூறப் பட்டிருக்கிறது. சமுதாயத் துறையிலும், ஆத்மீகத் துறையிலும் இருக்கின்ற ஏற்றத்தாழ்வுகளை போக்குவதற்கு முயற்சி எடுக்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இந்த கேள்வி சிக்கலாக இருக் கிறது. இப்போது பொருளாதாரத் துறையைப்பற்றிதான் கேள்வி. ஆத் மீகத் துறையைப்பற்றியும், மற்ற துறைகளைப்பற்றியும் தனியாக கேள்வி போட்டால் பதிலளிக்கலாம்.

SRI S. NAGARAJA MONIGAR: ஸர், தனியார் துறை, தனியார் சொத்து சுதந்திரம் என்றவைகளின்கீழ் தனிப்பட்டவர்களுக்கு அதிக நிலச் சொத்து, வீடுகள், தொழிற்சாலைகள் அதிகரித்து, பாதுகாக்கப்பட்டு, மாம் பலம், அடையா போன்ற இடங்களிலுள்ள இந்திரபோகங்களுண்டாகும் வரையிலும் இந்த சமத்துவம் சீக்கிரத்தில் கிடைக்குமா என்பதை அறிய வேண்டுகிறேன்.

MR. SPEAKER: இந்தக் கேள்வி அவுட் ஆப் ஆர்டர்.

Director of Medical Services

* 29 *Q.*—SRI M. JAGANNATHAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of times the Director of Medical Services inspected the hospitals in the South Arcot district in 1956–57 and 1957–58; and

(*b*) the names of the hospitals visited?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) 1956–57—Twice and 1957–58—Nil.

(*b*) (1) Government Headquarters Hospital, Cuddalore—(Twice).

(2) Government Hospital, Villupuram.

(3) Government Hospital and Maternity Centre, Sethiathope.

(4) Government Hospital, Chidambaram.

SRI M. JAGANNATHAN: தலைவர் அவர்களே, மெடிகல் ஸர்வீஸ் டைரெக்டர் அவர்கள் இந்த ஆஸ்பத்திரிகளை பார்வை யிட்டதில் ஏதாவது அபிவிருத்தி செய்யவேண்டுமென்று சிபாரிசு செய் திருக்கிறார்களா ? அப்படியானால் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU: கடலூரில் பெரிய ஆஸ்பத்திரி கட்டுவதற்கு சிபாரிசு செய்திருக்கிறார்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS